**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 20.02.2026

அசல் வழக்கு எண். 140/2016

பி.சா. 1 – அபிராமி, த/பெ. சரவணபெருமாள்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>வாதியின் குறுக்கு விசாரணை</u>**

உங்களுடைய அப்பா பெயர் என்ன என்றால் சாமிநாத முதலியார் ஆவார். உங்கள் அப்பா 1995 ஆம் ஆண்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். உங்கள் அம்மா பெயர் என்ன என்றால் கமலா அம்மாள் எப்பொழுது இறந்து விட்டார். அவர் கடந்த 2010 ஆம் ஆண்டு இறந்து விட்டார் என்றால் சர்டிபிகேட்டில் பார்க்க வேண்டும் வீட்டில் இருக்கிறது ஞாபகம் இல்லை. உங்கள் பெற்றோருக்கு வாதி ஜீவா, பிரதிவாதி அபிராமி, அன்னபூரணி ஆகிய நீங்கள் மூவரும் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கில் உள்ள முதலாவது ஐட்டம் சொத்து உங்கள் அப்பா சாமிநாத முதலியார் வாங்கியது என்றால் சரிதான். உங்கள் பெற்றோர் உயிருடன் இருந்த பொழுது முதல் ஐட்ட சொத்திற்கு உயில் அல்லது செட்டில்மெண்ட் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு 1964ஆம் ஆண்டு திருமண நடைபெற்றது. உங்களை எங்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் காஞ்சிபுரத்தில் உள்ள புதுப்பாளையம் தெருவில் உள்ள வீட்டிற்கு திருமணம் செய்து கொடுத்தார்கள். உங்கள் கணவர் பெயர் என்ன என்றால் சரவணன்பெருமாள் ஆவார். நீங்கள் அந்த தெருவில் தான் வசித்து வருகிறீர்கள் என்றால் சரிதான். முதல் ஐட்டம் சொத்து உள்ள இடத்தில் நிரந்தர செங்குந்த மரபினர் பூர்வகுடி மக்கள் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த சொத்து பற்றி எல்லா

ஆவணங்களும் உங்கள் அப்பா பெயரில் இருக்கிறது என்றால் சரிதான். அந்த இடத்தில் அதாவது முதல் ஐட்ட சொத்தில் பவானி என்பவரை வாடகைக்கு வைத்து இருந்தீர்கள் என்றால் சரிதான். மாத வாடகை எவ்வளவு என்றால் ரூ.800/- ஆகும் தற்பொழுதுதான் வாடகையை உயர்த்தி இரண்டு மாதங்களாக ரூ.1,000/- கொடுக்கிறார்கள். மேற்படி வாடகை பணம் நீங்கள்தான் வசூல் செய்கிறீர்கள் என்றால் சரிதான். கடந்த 2015 ஆண்டு பிள்ளையார் பாளையம் ஐந்து தெருவை சார்ந்த நிரந்தர செங்குந்த சமுதாய மரபினர்களுக்கு பூர்வீகமாக வசித்து வருபவர்களுக்கு இடம் ஒதுக்கி கொடுத்தார்கள் என்றால் சரிதான். இரண்டாவது ஐட்டம் சொத்து தெருவார் கொடுத்த சொத்து அக்கா, தங்கை மூன்று பேருக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். உங்களுக்கு எழுதிக் கொடுத்த ஆவணத்தில் செங்குந்த சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கி கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். உங்கள் அம்மா இறந்த பொழுது 8 சவரன் நகை வீட்டில் இருந்தது என்றால் இருந்தது. அந்த நகை உங்கள் அனைவருக்கும் சொந்தம் என்று சொன்னால் சரிதான். வாடகை பணம் மேற்படி மூன்று பேருக்கும் பாத்தியப்பட்ட பணம் என்றால் சரிதான். வழக்கு சொத்தான இரண்டு ஐட்டங்களும் வாடகை பணமும் எட்டு சவரன் நகையும் மூன்று பேருக்கும் சமமான பாகம் உண்டு என்று சொன்னால் சரிதான்.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,

Additional Subordinate Judge,
Kancheepuram.